12-09-2024.
O.S.No. 48/2020

வா. சா. 1 மெய்யப்பன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

தற்போது நான் வேலை பார்த்து வருகிறேனா என்றால் என்னுடைய மனைவி நடத்தி வரும் ரீகல் பர்னிச்சர் இன்டஸ்ட்ரீசில் மேற்பார்வை பார்த்து வருகிறேன். இதை தவிர வேறு வேலை எதுவும் பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதியின் மகன் சென்னையில் வேலை பார்த்து வருவது எனக்கு எப்படி தெரியும் என்றால் என்னிடம் பணம் வாங்க வரும்போது சொன்னார். அவரை நேரடியாக தெரியாது என்றால் பணம் வாங்க வரும்போது அவரை கூட்டி வந்தார்கள். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பி வைக்கவில்லை என்றால் பிரதிவாதி ஐபி தாக்கல் செய்ததால் அறிவிப்பு கொடுக்க இயலாமல் உடனடியாக வழக்கு தாக்கல் செய்தேன். என் வீட்டில் வைத்து பிரதிவாதிகள் மற்றும் சாட்சிகள் வைத்து புரோநோட்டு எழுதப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் கண்ட விலாசமும், புரோநோட்டில் கண்ட விலாசமும் ஒரே முகவரியா என்றால் ஒரே முகவரிதான். புரோநோட்டு தொகை ரூ.13 லட்சத்தை கொடுக்கும் வசதி எனக்கு இல்லை என்றால் சரியல்ல. ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். ரூ.13 லட்சத்தை மொத்தமாக கொடுத்தேன். வங்கியிலிருந்து எடுத்துக்கொடுக்கவில்லை. வீட்டில் இருந்து எடுத்துக் கொடுத்தேன். மேற்படி பணத்திற்கு நான் வருமான வரி கட்டவில்லை. புரோநோட்டு 01.03.2018ம் தேதி என் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. புரோநோட்டு எழுதும்போது பாலகிருஷ்ணன் இருந்தார். புரோநோட்டை எழுதியவர் ரேவதி. பிரதிவாதிகள் மூன்று பேரும் இருந்து பணத்தை வாங்கினார்கள். என் மனைவி வைத்துள்ள ரீகல் இண்டஸ்ட்ரீயில் நான் பார்ட்னர் இல்லை. மேற்பார்வை பார்த்து வருகிறேன். நான் மேற்பார்வைதான் பார்த்து

வந்தேன் என்பதால் ரூ.13 லட்சம் கொடுப்பதற்கு எனக்கு வசதியில்லை என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் 2014 ல் கொடுத்த புரோநோட்டை 2018 என மாற்றி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.09.12 16:02:21 +0530

Principal District Judge,
Dindigul.